காலை முரசு

பக்கங்கள்:-28

## எரிபொருள் விலைகள் நள்ளிரவு முதல் உயர்வு




இலங்கையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மாசி 01 | ஞாயிற்றுக்கிழமை | 01.03.2026 | அதிர்வு 213

# மத்திய கிழக்கு போர் பதற்றம்:

# இலங்கையர்களுக்குப் பாதிப்பில்லை!

### வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வ அறிவிப்பு




மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவி வரும் போர் பதற்றம் காரணமாக, அங்கு வசிக்கும் இலங்கையர்களுக்கு இதுவரை எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அங்குள்ள நிலைவரங்கள் குறித்து வெளிவிவகார 06

# எரிபொருள் நிலையங்களில் மக்கள் நேற்று நீண்ட வரிசை

### தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை; தாராளமாக உள்ளது என்று அரசு அறிவிப்பு



மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில், நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மாலை முதல் இரவு வரை மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. எனினும், இத்தகைய அச்சம் தேவையற்றது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. 02

# இலங்கையர்கள் பற்றி அறிய அவசர இலக்கங்கள் அறிமுகம்

### வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அதிரடி நடவடிக்கை

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவி வரும் பதற்றமான சூழலைக் கருத்திற்கொண்டு, அங்குள்ள இலங்கைத் தொழிலாளர்கள் மற்றும் உறவினர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விசேட அவசர தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட 06







ஜனாதிபதித் தேர்தலை அடுத்து நாடாளுமன்றத் தேர்தலில் பெரு வெற்றி ஈட்டிய ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு அதைத் தொடர்ந்து வந்த உள்ளூராட்சித் தேர்தலில் படுக்கத் தொடங்கிவிட்டது என்பது தெரிந்த விடயம்தான்.

அதன் பின்னர் 323 கென்டெய்னர்கள் கொண்ட இறக்குமதிப் பொருள்கள் உரிய சுங்கச் சோதனைகளின்றி விடுவிக்கப்பட்டமை மற்றும் மின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட தரம் குன்றிய எட்டுக் கப்பல் நிலக்கரியினால் நாட்டுக்கு 770 கோடி ரூபா வரை இழப்பு என்று பல்வேறு முறைகேடுகள் காரணமாக ஆளும் தரப்பின் மக்கள் ஆதரவும் செல்வாக்கும் கணிசமாகக் குறைந்து விட்டது என்று கூறப்படுகின்றது.

ஆளும் தரப்பின் மக்கள் செல்வாக்கு 15 முதல் 20 சதவீத வீழ்ச்சியைக் கண்டிருப்பதாக எதிர்க் கட்சிகள் கருத்துக் கூறி வருகையில், தங்களின் மக்கள் செல்வாக்கை மீண்டும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்தும் விதத்தில் பொது நிகழ்வை 06

**எரிபொருள் நிலையங்களில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா ஊடகங்களுக்கு வழங்கிய விசேட விளக்கத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:–

**போதுமான கையிருப்பு**

“இலங்கையில் தற்போதுள்ள கையிருப்பு மற்றும் அடுத்தடுத்து நாட்டை வந்தடையவுள்ள எரிபொருள் கப்பல்களின் விவரங்களின்படி, எவ்விதத் தடையுமின்றி விநியோகத்தை முன்னெடுக்க முடியும்.

குறிப்பாக பெற்றோல் இன்னும் 37 நாள்களுக்குப் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது.

ஒட்டோ டீசல் இன்னும் 35 நாள்களுக்குப் போதுமான அளவு உள்ளது.

விமான எரிபொருள் இன்னும் 47 நாள்களுக்குப் போதுமான அளவு சேமிப்பில் உள்ளது.

**இறக்குமதியில் பாதிப்பில்லை**

இலங்கைக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் (பெற்றோல், டீசல்) பெரும்பாலும் இந்தியா, சிங்கப்பூர், கொரியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே, மத்திய கிழக்கில் உள்ள ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டாலும் கூட, எமது இறக்குமதிக்கு அது பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது.

**மசகு எண்ணெய் நிலைவரம்**

மசகு எண்ணெய் இறக்குமதிக்கு மாத்திரமே சிறிய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இருப்பினும், தற்போது எம்மிடம் உள்ள மசகு எண்ணெய் கையிருப்பு ஒரு மாத காலத்துக்கு முழுமையாகப் போதுமானது. எனவே, பொதுமக்களோ அல்லது வாகன சாரதிகளோ தேவையற்ற முறையில் கலக்கமடைய வேண்டாம்.” – என்றார்.

**மக்களிடம் வேண்டுகோள்**

ஒரு கப்பல் கூட வராவிட்டாலும் கூட, குறிப்பிட்ட காலத்துக்குத் தடையின்றி விநியோகம் செய்ய முடியும் என உறுதிபடத் தெரிவித்துள்ள அவர், மக்கள் தேவையற்ற முறையில் எரிபொருளைச் சேமிக்க முற்பட வேண்டாம் என்றும், அத்தகைய பதற்றமே தேவையற்ற நெருக்கடிகளை உருவாக்கும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.















# லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தில் படகு கவிழ்ந்து 2 இளைஞர்கள் மாயம்

## மீன்பிடிக்கச் சென்ற வேளை விபரீதம்

(க.மகாதேவன்)

அம்பாந்தோட்டை, லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தில் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், மீன்பிடிக்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் நீரில் மூழ்கிக் காணாமல்போயுள்ளனர்.

நேற்று லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தில் மீன்பிடிக்கச் சென்ற போதே எதிர்பாராத விதமாக இந்தப் படகு கவிழ்ந்துள்ளது.

இதில் பயணித்த 18 வயதுடைய இரண்டு இளைஞர்களே நீரில் மூழ்கிக் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போன இளைஞர்களைக் கண்டறியும் பணிகளுக்காக திஸ்ஸ மஹாராம கடற்படைப் பிரிவு மற்றும் விசேட சுழியோடிகள் பிரிவு என்பன இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

அப்பகுதி மக்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தேடுதல் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இதுவரை இளைஞர்கள் குறித்த எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# இணையவழி வங்கிப் பணப்பரிமாற்றங்களின் போது மிகவும் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல்

இணையவழி வங்கிப் பணப்பரிமாற்றங்களின் போது மிகவும் அவதானமாக செயற்படுமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது.

வங்கிகளின் உத்தியோகபூர்வ இணையதளங்கள் போன்ற போலித் தளங்களை உருவாக்கி மோசடியாளர்கள் சூட்சுமமான முறையில் வாடிக்கையாளர்களின் பணத்தை மோசடி செய்வதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் பிரதான தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் நிரோஷ் ஆனந்த தெரிவித்துள்ளார்.

விசேட விலை கழிவுகளை வழங்குவதாக சமூக வலைத்தளங்களில் விளம்பரப்படுத்தி அதனூடாக பாதுகாப்பற்ற செயலிகளை தரவிறக்கம் செய்யுமாறு மோசடியாளர்களினால் அறிவுறுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேற்படி செயலிகளின் ஊடாக வங்கி கணக்குகளின் தகவல்களை பெற்று வாடிக்கையாளர்களின் பணத்தை மோசடி செய்த சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் பிரதான தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் நிரோஷ் ஆனந்த குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சந்தர்ப்பங்களின் போது இணையத்தளங்களின் முகவரிகளை உறுதி செய்யுமாறும் அவர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

SRI LANKA CERT | CC

# இலங்கை வான்பரப்பில் வெளிநாட்டு விமானங்கள்

## இலங்கை விமானப்படை மறுப்பு

SRI LANKA AIR FORCE

அத்துடன், இலங்கையின் வான்பரப்பில் வெளிநாட்டு இராணுவ விமானங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் பரவும் செய்திகள் உண்மையில்லை என விமானப்படை விளக்கமளித்துள்ளது.

தற்போது வான்பரப்பில் காணப்படும் மேலதிக விமானப் பறப்புகள் யாவும், விமானப் படையின் 75 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களுக்காக முன்னெடுக்கப்படும் உள்நாட்டு ஒத்திகைகளே என்று விமானப் படை தெரிவித்துள்ளது.

ஈரான் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து எழுந்த பொதுமக்களின் அச்சத்தைத் தணிக்கும் வகையில் இந்தத் தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இலங்கை விமானப் படையின் 75 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு? மார்ச் 2 ஆம் திகதியன்று கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் பிரதான அணிவகுப்பு நடைபெறும்.

மார்ச் 6 முதல் 8ஆம் திகதிவரை, இரத்மலானை விமானப்படை தளத்தில் பொதுமக்கள் கண்டுகளிக்கக்கூடிய வான்வழி சாகசங்கள் மற்றும் விமான கண்காட்சிகள் இடம்பெறும் என்று இலங்கை விமானப் படை அறிவித்துள்ளது.

# யாழில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு கிடையாது!

## வதந்திகளை நம்ப வேண்டாம் என அரச அதிபர் அறிவிப்பு




யாழ்ப்பாணம் மாவட்டத்திற்குத் தேவையான பெற்றோல் கையிருப்பில் உள்ளதால் பொதுமக்கள் தேவையற்ற பீதியடைய வேண்டாம் என மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

செயற்கையான எரிபொருள் தட்டுப்பாட்டை உருவாக்குவதைத் தவிர்க்குமாறும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காங்கேசன்துறையிலுள்ள பெற்றோல் களஞ்சிய முனையமானது வழமை போல் இன்று ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டிருக்கும். இதனால், மாவட்டத்திலுள்ள சகல எரிபொருள் நிலையங்களுக்கும் நாளை திங்கட்கிழமை முதல் வழமை போன்று பெற்றோல் விநியோகிக்கப்படும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவருடன் நேற்று நான் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு கலந்துரையாடினேன். இதன்போது, நாட்டுக்குத் தேவையான ஒரு மாதத்திற்கும் அதிகமான காலத்திற்குப் போதுமான பெற்றோல் கையிருப்பில் இருப்பதாக அவர் என்னிடம் உறுதிப்படத் தெரிவித்தார்.

எனவே, பொதுமக்கள் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து நிலவும் வதந்திகளை நம்பித் தேவையற்ற முறையில் எரிபொருளைச் சேமிக்க முற்பட வேண்டாம். யாழ். மாவட்டத்திற்குத் தேவையான எரிபொருள் விநியோகம் சீராக முன்னெடுக்கப்படும்." – என்றார்.



# நாட்டில் பல பிரதேசங்களில் காற்றின் தரத்தில் வீழ்ச்சி

நாட்டில் பல பிரதேசங்களில் காற்றின் தரம் மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளதாக தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் மாசடைந்த காற்றின் தாக்கத்தினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் காற்று மாசு முகாமைத்துவ பிரிவின் பிரதான நிபுணர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் கோட்டை பிரதேசத்தில் அதன் தரக்குறியீடு 127 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

அனுராதபுரத்தில் 76 புள்ளியாகவும், தம்புள்ளையில் 71 புள்ளியாகவும், காலியில் 69 புள்ளியாகவும் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், பதுளை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கேகாலை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலும் நேற்று காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் காற்று மாசு முகாமைத்துவ பிரிவின் பிரதான நிபுணர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.




# யாழ். தனியார் பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட கருச்சிதைவு!

## சி.சி.ரி.வி. காட்சிகளுடன் பொலிஸார் தேடுதல் வேட்டை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகரின் தனியார் பஸ் நிலையப் பகுதியில் நேற்று சனிக்கிழமை சிசு ஒன்றின் கருச்சிதைவு கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விவரங்கள் வருமாறு:–

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்குப் பின்புறமாக பெண்ணொருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிக்கொண்டிருந்து விட்டு, திடீரென அங்கிருந்து மறைந்துள்ளார். அதன் பின்னர், தனியார் பஸ் நிலையப் பகுதி வீதியில் சுமார் 6 முதல் 7 மாதங்கள் மதிக்கத்தக்க கரு ஒன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பொலிஸாரும் தடயவியல் நிபுணர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து முதற்கட்ட ஆய்வுகளை மேற்கொண்டனர்.

சம்பவ இடத்திற்கு நேரில் வருகை தந்த யாழ். நீதிவான் லெனின்குமார், விசாரணைகளை முன்னெடுத்தார். அப்பகுதியிலுள்ள கண்காணிப்பு கமரா காட்சிகளின் உதவியுடன் சந்தேகநபரைக் கண்டறிய மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறும், மீட்கப்பட்ட கருவை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

நீதிவானின் உத்தரவுக்கமைய, மீட்கப்பட்ட கருச்சிதைவை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் செயலில் ஈடுபட்ட பெண்ணைக்கண்டறியும்நோக்கில்யாழ்.பொலிஸார் தீவிர விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.














## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மக்கள் எழுச்சியோடு நடத்திக் காட்ட ஆளும் தரப்புத் தயாராகி வருவதாகத் தெரிகின்றது.

அதற்காக இன்னும் ஒரு வாரத்தில் – அதாவது வரும் எட்டாம் திகதி – வரவிருக்கும் சர்வதேச மகளிர் தினத்தில் தங்களின்செல்வாக்கைவெளிப்படுத்தும்நிகழ்ச்சியை கொழும்பில் பெருமெடுப்பில் நடத்திக் காட்ட வேண்டும் என்று ஜே.வி.பி. தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

மகளிர் தினத்தன்று கொழும்பில் 30 ஆயிரம் மகளிரை ஒன்று திரட்டிக் காட்டுவதன் மூலம் தமது செல்வாக்கை மீண்டும் நிரூபிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா மிக முனைப்புடன் இருக்கிறார் என்றும் தெரிகின்றது.

அதே நேரத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் மகளிர் தினத்தன்று பத்தாயிரத்துக்குக் குறையாத பெண்களைக் கொழும்பில் ஒரு நிகழ்வுக்காகக் கூட்டித் தன் புஜபல பராக்கிரமத்தை வெளிப்படுத்த விரும்புவதாகத் தெரிகின்றது.

அதாவது மகளிர் தினத்தை ஒட்டி ஆளுந்தரப்பும் எதிர்க்கட்சியும் தங்களின் மக்கள் செல்வாக்கை வெளிப்படுத்தும் நிகழ்வுகளை நடத்தத் தயாராகி விட்டன. பாவம், அதற்காக இரண்டு தரப்புகளிலும் தலைநகரில் மகளிர் காத்திருக்க வேண்டி நேரப் போகின்றது.

இதே நேரம் அண்மையில் இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, இந்த ஆண்டு இறுதியிலோ அல்லது அடுத்த ஆண்டு முற்பகுதியிலோ நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலுக்காகத் தமது கட்சி தயாராகிக் களத்தில் நேரத்துடன் செயற்பட வேண்டும் என்று கட்சி வட்டாரங்களுக்குக் கட்டளை பிறப்பித்து இருக்கின்றார் என்று தென்னிலங்கையின் அரசியல் விமர்சகர் ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

*  *  *

'தமிழர்களின் நிகழ்காலப் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகள் தொடர்பான மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடல்' என்ற பெயரில் நேற்றுக் காலை மட்டக்களப்பு, பழுகாமம் கலாசார மண்டபத்தில் கூட்டம் ஒன்று 'தமிழர் பண்பாட்டு உணர்வாளர்கள்' என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்ட 'அரியநேத்திரன் அண்ட் கோ'வினர் ஏற்பாடு செய்த கூட்டம் இது என்று தெரிகிறது.




காலை 9 மணிக்கு கூட்டம் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் ஏறத்தாழ இரண்டு மணி நேரத்துக்கு மேல் தாமதித்து மதியம் அளவில்தான் கூட்டம்



தொடங்கியது. 50 முதல் 100 பேர் வரை கூட்டத்துக்கு வந்து சென்று கொண்டிருந்தனர்.

கூட்டம் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகளைப் பெயர் குறிப்பிடாமல் தாக்குவதை இலக்காகக் கொண்டிருந்தது. அதைத்



தான் அரியநேத்திரன் உட்பட உரையாற்றியவர்களும் முன்னெடுத்தனர்.

கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிநேசன், சிறிநாத், கோடீஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர். ஆயினும் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி சார்பில் உள்ளூராட்சி சபைகளில் அங்கம் வகிக்கும் நிர்வாகிகளில் வவுணதீவு பிரதேச சபையின் தலைவர் தவிர, வேறு எவரும் அங்கு தலைகாட்டவில்லை. முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவரும் தமிழரசு கட்சியிலிருந்து பங்குபற்றியிருந்தார். மற்றும்படி தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களின் தலையை அங்கு காணவே முடியவில்லை.

தமிழரசுக் கட்சியின் மூன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியையோ, தலைமையையோ தாக்கிப் பேசவில்லை. ஆயினும் அந்தக் கூட்டம் தமிழரசுக் கட்சியை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாக பார்வையாளர்கள் ஒருவர் குறிப்பிட்டார்.

மூன்று தமிழரசு எம்.பிக்கள் கூட்டத்துக்கு சமுகம் தந்திருந்த போதிலும், அவர்களின் இருவர் மூன்றாவது எம்.பியின் மிகுந்த வற்புறுத்தலின் காரணமாக தவிர்க்க முடியாமல் வந்தவர்கள் என்று உள்வட்டங்களில் பேசப்பட்டது.

கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரைகள் தொடர்பிலும், கூட்டத்தின் நகர்வு குறித்தும் தமிழரசுக் கட்சியின் தலைமை நிச்சயமாக ஊடுருவிப் பார்க்கும் என்று நினைக்கிறேன்.

கட்சியை ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு கட்சித் தலைமை கனகாத்திரமாக முயற்சி எடுத்தாலும், அது 'சாண் ஏற முழம் சறுக்கும்' விவகாரமாகத்தான் தொடரும் போல தோன்றுகின்றது...!

## இலங்கையர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பகுதிகளில் உள்ளவர்கள் அல்லது இலங்கையில் உள்ள அவர்களின் உறவினர்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளப் பின்வரும் இலக்கங்களைப் பயன்படுத்த முடியும்.

* அவசர அழைப்பு (Hotline): 1989

* WhatsApp / Imo: +94 71 980 2822

இந்தத் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்புகொண்டு மேலதிக விவரங்கள் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், தூதரகங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன்படி, லங்கா டீசல் நான்கு ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 281 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், லங்கா சுப்பர் டீசல் 6 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 329 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

அதேநேரம், ஒக்டேன் 92 ரக பெற்றோல், ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 293 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும், ஒக்டேன் 95 ரக பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் விலையில் எந்தவித மாற்றமும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒக்டேன் 95 ரக பெற்றோல் 340 ரூபாவுக்கும், மண்ணெண்ணெய் 182 ரூபாவுக்கும் அதே விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது.

## இலங்கையர்களுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமைச்சு வெளியிட்டுள்ள விரிவான தகவல்கள் வருமாறு:

### தூதரகங்களுடன் நேரடித் தொடர்பு


மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை அடுத்து, பிராந்தியத்திலுள்ள அனைத்து இலங்கைத் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்களுடன் வெளிவிவகார அமைச்சு தொடர்ச்சியான மற்றும் மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகின்றது. அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் நிலைமைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்.

### பாதுகாப்பு வழிகாட்டல்கள்

போர் பதற்றம் நிலவும் பகுதிகளில் வசிக்கும் இலங்கையர்கள் பின்பற்ற வேண்டிய விசேட பாதுகாப்பு வழிகாட்டல்கள், அந்தந்த நாட்டுத் தூதரகங்கள் ஊடாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அந்த வழிகாட்டல்களைச் சரியாகப் பின்பற்றி, மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அங்குள்ள இலங்கையர்களை அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

### பாதுகாப்பு உறுதி

தற்போதைய நிலவரப்படி இலங்கையர்களுக்குப் பெரிய அளவிலான பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து மேலதிக நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.


GOLDEN VOICE
OF NORTH
குரல் தேர்வு
விரைவில்...!
a one
MEDIA NETWORK
MURASU
digital
tamil one

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஏமாளித்தனம்!

'தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டியது போல' என்பார்கள்.

அது போன்று, மத்திய கிழக்கில் யுத்தம் வெடித்ததும் அல்லது பெரும் தாக்குதல்கள் இடம் பெறுதும் இலங்கையில் யாழ்ப்பாணம் முதல் பிரதான நகரங்களில் எல்லாம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வாகனங்கள் வரிசையில் திரண்டு விடும்.

இது அண்மைக்காலத்தில் திடீர் பதற்றங்களால் ஏற்படும் வழமையான ஒரு நோயாகிவிட்டது. பரவணிப் பழக்கமாகி விட்டது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில், நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மாலை முதல் இரவு வரை மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

எனினும், இத்தகைய அச்சம் தேவையற்றது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள கையிருப்பு மற்றும் அடுத்தடுத்து நாட்டை வந்தடையவுள்ள எரிபொருள் கப்பல்களின் விவரங்களின்படி, எவ்விதத் தடையுமின்றி விநியோகத்தை முன்னெடுக்க முடியும் என்று கூட்டுத்தாபனம் மிக உறுதியாகக் கூறுகின்றது.

குறிப்பாக பெற்றோல் இன்னும் 37 நாள்களுக்குப் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. ஒட்டோ டீசல் இன்னும் 35 நாள்களுக்குப் போதுமான அளவு உள்ளது. விமான எரிபொருள் இன்னும் 47 நாள்களுக்குப் போதுமான அளவு சேமிப்பில் உள்ளது.

இலங்கைக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் (பெற்றோல், டீசல்) பெரும்பாலும் இந்தியா, சிங்கப்பூர், கொரியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. எனவே, மத்திய கிழக்கில் உள்ள ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டாலும் கூட, இலங்கைக்கான இறக்குமதிக்கு அது பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் விளக்கப்படுகின்றது.

ஆயினும், நாட்டு மக்கள் பதறியடித்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற சமாதானத்தைத் தங்களுக்குத் தாங்களே கூறிக்கொண்டு, எரிபொருள் நிலையங்களுக்கு முன்னால் தேவையற்ற வரிசையில் கூடி, இரவிரவாகக் காத்துக் கிடந்து, செயற்கைத் தட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்தி, குழப்பம் உருவாக்காமல் விடமாட்டார்கள் என்பது முன்னரே நாம் படித்த பாடம்தான்.

மத்திய கிழக்குப் போர் பதற்றத்தினால், அங்கிருந்து உலகுக்கு விநியோகிக்கப்படும் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று தங்களுக்கு தாங்களே கற்பனையான கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு, மக்கள் இப்படி ஒரே சமயத்தில் எரிபொருள் வாங்க ஒன்றுகூடி, செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி, எல்லா எரிபொருள் பாவனையாளர்களுக்கும் நெருக்கடியை ஏற்படுத்துவது அர்த்தமற்ற ஏமாளித்தனமாகும்.



**பர்ஹான்**

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 100 | 60 | 05 | 09 |

## கடைசிவரை போராடியது இலங்கை

# பாகிஸ்தானுக்கு ஆப்பு நியூஸிலாந்துக்கு வாய்ப்பு

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியின் முடிவையடுத்து நியூஸிலாந்து அணி அரையிறுதிக்கான வாய்ப்பைப் பெற்றது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 8 சுற்றுப் போட்டி ஒன்று நேற்றிரவு கொழும்பில் நடந்தது.

இதில் பாகிஸ்தான், இலங்கை அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 212 ஓட்டங்களைச் சேர்த்தது.

பர்ஹான் அதிரடியாக ஆடி சதமடித்து ஆட்டமிழந்தார். பகர் சமான் 84 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இலங்கை சார்பாக பந்துவீச்சில் மதுஷனக 3 விக்கெட்டுகளையும், தசுன் ஷானக 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இலங்கை அணியை 142 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தினால் பாகிஸ்தான் அரையிறுதி செல்ல முடியும் என நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், இலங்கை அணி 145 ஓட்டங்களைக் கடந்தமையால் பாகிஸ்தானின் அரையிறுதி வாய்ப்புப் பறிபோனது.

ரத்நாயகக்க அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்து 58 ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றார்.

பின்னர் வந்த அணித்தலைவர் ஷானக அதிரடியாக ஆடி வெற்றியிலக்கை நோக்கி நகர்த்தினார்.

கடைசிப் பந்தில் ஆறு ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அந்தப் பந்து ஓட்டமற்ற ஓவரானதால் வெற்றியிலக்கை எட்ட முடியவில்லை. ஆனாலும் அந்தக் கடைசிப் பந்து அகலப்பந்து என்பது மீள் பரிசோதனையில் தெரிந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக பாகிஸ்தானின் பர்ஹான் தெரிவானார்.

இத்தொடரின் அரையிறுதிக்கான வாய்ப்பை ஏற்கனவே இலங்கை இழந்திருந்த நிலையில், பாகிஸ்தானும் அந்த வாய்ப்பை இழந்து வெளியேறினது. இதனால், நியூஸிலாந்து அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

### ரி-20 உலகக் கிண்ணம்: ‘சுப்பர்-8’

**குழு 02 - புள்ளிப்பட்டியல்**

| அணிகள் | போ | வெ | தோ |ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.096 |
| நியூஸிலாந்து | 3 | 1 | 1 | 0 | 1 | 3 | 1.390 |
| பாகிஸ்தான் | 3 | 1 | 1 | 0 | 1 | 3 | -0.123 |
| இலங்கை | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -1.950 |

## ரி-20 உலகக் கிண்ணம் ‘சுப்பர்-8’: இன்றைய போட்டிகள்

| குழு | அணி | | அணி | நாள் / நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| குழு-01 | சிம்பாப்வே | எதிர் | தெ.ஆபிரிக்கா | ஞாயிறு 01 மார்ச் 3 மணி பி.ப. | டில்லி இந்தியா |
| குழு-01 | இந்தியா | எதிர் | மே.இ.தீவுகள் | ஞாயிறு 01 மார்ச் 7 மணி இரவு | கொல்கத்தா இந்தியா |





### 13,500 இற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகையால்

# வரலாற்றுச் சாதனை படைத்த கச்சதீவு வருடாந்தத் திருவிழா

## வெளியேறும் போது பாரிய நெரிசலால் மக்கள் அவதி

கச்சதீவுபுனிதஅந்தோனியார்ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இம்முறை வரலாற்றுச் சாதனையாக 13 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்புடன் நிறைவடைந்தது. இருப்பினும், திருவிழா நிறைவு பெற்று பக்தர்கள் கச்சதீவிலிருந்து வெளியேற முற்பட்ட போது பாரிய சனநெரிசல் ஏற்பட்டது.

நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து, ஒரே நேரத்தில் பெருமளவு பக்தர்கள் தத்தமது ஊர்களுக்குத் திரும்புவதற்காகப் படகுத் துறையை நோக்கி விரைந்தனர்.

பெருமளவு மக்கள் ஒரே இடத்தில் திரண்டதால், படகு ஏறும் பகுதியில் நீண்ட வரிசைகளும் தள்ளுமுள்ளு நிலையும் காணப்பட்டது.

இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்த பக்தர்கள் அனைவரும் குறுகிய காலப்பகுதிக்குள் கச்சதீவிலிருந்து வெளியேற முயன்றமையே இந்த நெரிசலுக்குப் பிரதான காரணமாக அமைந்தது.

கடும் வெயிலுக்கு மத்தியில் முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் இந்த நெரிசலால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

கடற்படையினர் நிலைமையைக் கட்டுப்படுத்தப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இம்முறைத் திருவிழாவானது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

நெடுந்தீவு பங்குத்தந்தை மற்றும் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் தலைமையில் திருப்பலிகள் இடம்பெற்றன.

இலங்கை மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பு உயர் அதிகாரிகள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.





# தற்போது போல நெல் சந்தைப்படுத்தல் சபை வரும் சிறுபோகத்திலும் தவறிழைக்க முடியாது

## கொள்வனவுக்கு தயாராக இருக்க வேண்டும் என்கிறார் ரவிகரன்

**(விஜயரத்தினம் சரவணன்)**

நெல்சந்தைப்படுத்தல் சபையினர் தமது களஞ்சியசாலைகளில் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட நெல் மூடைகளை அகற்றாது தேக்கி வைத்திருந்ததன் காரணத்தினால் 2025 - 2026ஆம் ஆண்டுகளுக்குரிய பெரும்போக காலத்தில் அறுவடைசெய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டிருந்ததாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் 2026ஆம் ஆண்டிற்குரிய சிறுபோக காலத்திலும் நெல் சந்தைப்படுத்தல் சபை அத்தகைய தவறை செய்யக்கூடாதெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், சிறுபோக அறுவடைக்காலத்திற்கு முன்னரே நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சிய சாலையில் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு தேங்கியுள்ள நெல் மூடைகள் உரிய வகையில் அகற்றப்பட்டு, சிறுபோகத்தில் அறுவடைசெய்யப்படுகின்ற நெல்லை விவசாயிகளிடமிருந்து தாமதமின்றி கொள்வனவ. செய்வதற்கு ஏற்றவாறு களஞ்சியசாலைகள் தயார் நிலையில் இருக்கவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு வன்னி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர் ஆகியோரும் இந்த விடயத்தில் உரிய வகையில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் ரவிகரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இம்முறை பெரும்போகத்தில் அறுவடைசெய்யப்பட்ட நெல்லை விற்பனைசெய்வதற்கு விவசாயிகள் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

குறிப்பாக நெல் சந்தைப்படுத்தல் சபையினரின் நெற்கொள்வனவில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே விவசாயிகள் தமது நெல்லை அரசின் நிர்ணயவிலையில் விற்பனைசெய்வதற்கு இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெற்கொள்வனவில் தாமதம் ஏற்பட்டதால், விவசாயிகள் அரசின் நிர்ணய விலையில் தமது நெல்லை விற்பனை செய்வதற்கு பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பல விவசாயிகளால் குறைந்த விலையில் தமது நெல்லினை தனியார் நெற்கொள்வனவாளர்களிடம் விற்பனை செய்து நட்டம் அடையவேண்டிய சூழல் ஏற்பட்டது.

நெல்சந்தைப்படுத்தல் சபை உரிய நேரத்தில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவை மேற்கொள்ளத் தவறியதால் விவசாயிகள் அரசின் நிர்ணய விலைக்கு நெல்லை விற்பனை செய்ய முடியாமல் குறைந்த விலையில் விற்பனைசெய்து பாரிய நட்டத்தை அடைந்துள்ளனர்.

நெல் சந்தைப்படுத்தல்சபை 2026 ஆம் ஆண்டு சிறுபோகத்திலும் இத்தகைய தவறினை இழைக்கக்கூடாது. சிறுபோக நெல் அறுவடை இடம்பெறுவதற்கு முன்னரே, விவசாயிகளிடமிருந்து நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்றவாறு களஞ்சியசாலைகளைத் தயார் நிலையில் வைத்துக்கொள்ளவேண்டும். - என்றார்.











# அடம்பனில் தமிழரசின் மக்கள் சந்திப்பு

**(மன்னார் நிருபர்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் அடம்பன் பகுதியில் பொதுமக்கள் சந்திப்பு நேற்றைய தினம் சனிக்கிழமை மதியம் இடம் பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளைத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது தமிழரசுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் இலங்கை தமிழரசுக் கட்சி செயல்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் எதிர்வரும் காலங்களில் இலங்கை தமிழரசுக் கட்சி எவ்வாறான முடிவுகளை செயல்படுத்த உள்ளது என்பது தொடர்பாகவும் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெளிவுபடுத்தினார்.















# கிளிநொச்சியில் சுற்றுச்சூழல் பற்றிய கலந்துரையாடல்

(பூ.லின்ரன்)

புதிய சுற்றுச்சூழல் சட்டம் தொடர்பாக தெளிவூட்டும் கலந்துரையாடல் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி ரவீந்திர காரியவசம் தலைமை வகித்தார்.

கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்கதிபர் நளாயினி இன்பராஜ், மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், சுற்றுச்சூழல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் ,வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் தொடர்பான திணைக்கள உத்தியோகத்தர்கள் எனஒ பலர் கலந்து கொண்டனர்.












# வீதி ஒழுங்கு இயக்கத்தின் ஏற்பாட்டில் வீதி ஒழுங்குகளை வலியுறுத்தி பேரணி

**(பாறுக் ஷிஹான்)**

வீதி ஒழுங்கு இயக்கம் ஏற்பாட்டில் வீதி ஒழுங்குகளை வலியுறுத்தியும் வீதி ஒழுங்கு மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் “உங்களுக்காக நாங்கள் நடக்கின்றோம்“ என்ற தொனிப்பொருளுடன் அமைதியான விழிப்புணர்வு பேரணி நேற்று முற்பகல் அக்கரைப் பற்றிலிருந்து ஆரம்பித்து அட்டாளைச் சேனை வரை நடைபெற்றது.

இதன்போது பல்வேறு சுலோக அட்டைகள் தாங்கிச் செல்லப்பட்டன.

☆ இன்றைய இளையோர்கள் மாற்றத்துக்குத் தயாராக உள்ளார்கள். அவர்கள் நல்ல சமூகத்தை உருவாக்க விரும்புகின்றார்கள். ஆனால் அவர்களை வழிநடத்த வேண்டியது யார்?

☆ இளைய தலைமுறையை கடிந்து கொள்ளாமல், அவர்களைக் குற்றம் சாட்டாமல் அவர்களுக்கு முன்மாதிரியாக நாமே நடந்து காட்டுவோம்.

☆ ஒழுக்கமான ஓட்டம், தலைக்கவசம் அணிதல், சட்டத்தை மதித்தல்,பொது இடங்களில் பொறுப்புணர்வு –இவற்றை முதலில் பெரியவர்கள் கடைப்பிடித்தால், இளையோர்கள் தானாகவே பின்பற்றுவார்கள்.

☆ இளையோர்களை கெடுக்காதீர்கள். அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். ஊக்கப்படுத்துங்கள். முன்னுதாரணமாக இருங்கள்.

☆ மாற்றம் பேசுவதால் வராது. மாற்றம் நாம் நடந்து காட்டுவதால் தான் வரும்.

– எனப் பல்வேறு கோஷங்கள் அடங்கிய சுலோகங்களுடன் இப்பேரணி இடம்பெற்றது.

வீதி ஒழுங்கு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் சமூகச் செயற்பாட்டாளருமான கே.நிஹால் அஹமட்டின் ஒருங்கிணைப்பில் 3 ஆவது வாரமாக நடைபெற்ற இவ்வீதி விழிப்புணர்வு நடைபேரணியில் அம்பாறை மாவட்டப் பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜீத் வெதமுல்லவின் பணிப்பில் அக்கரைப்பற்றுப் பொலிஸார், அம்பாறை மாவட்ட சாரணர் சங்க ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை, சாரணர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பெற்றோர் மற்றும் ஆண்கள், பெண்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



















# யாழ் மாநகரில் திண்மக்கழிவகற்றலுக்கென மேயரின் தலைமையில் விசேட செயற்றிட்டம்

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட குடியிருப்புகளற்ற பல்வேறு தனியார் வெற்றுக் காணிகள், வீதி ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் பொதுமக்கள் பலரும் சமூகப் பொறுப்பற்ற வகையில் தமது வீட்டு திண்மக்கழிவுகளை எழுந்தமானமாக வீசுகின்றமையையும், இதனால் பொது இடங்கள் மிகுந்த துர்நாற்றத்துடன் காணப்படுகின்றமையும், அத்தகைய வீதிகள் ஊடான போக்குவரத்தின் போது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதையும் அண்மைக்காலமாக அவதானிக்க முடிந்தது.

இந் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் முதலில் மேற்படி இடங்களில் வீசப்பட்டுள்ள திண்மக்கழிவுகளை அகற்றுவது தொடர்பில் யாழ் மாநகர முதல்வர் திருமதி வி.மதிவதனி தலைமையில் மாநகர சுகாதாரக் குழு தலைவர் எஸ்.சாருபனின் வழிநடாத்தில் சுகாதாரக் குழுவினால் விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மாநகரில் பொது இடங்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதற்காக சுகாதாரக் குழு தலைவர் சாருபன் தலைமையிலான குழுவின் கீழ் ஐந்து சுகாதார ஊழியர்கள், டிராக்டர் மற்றும் ஜே.சி.பி இயந்திரம் உள்ளடங்கலான ஆளணி மற்றும் வாகன வளங்கள் விசேடமாக வழங்கப்பட்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

முதல்வர் தலைமையில் மாநகரில் முன்னெடுக்கப்படும் இவ் விசேட திண்மக்கழிவகற்றல் வேலைத்திட்டத்தை நேற்று முதல்வர் வி.மதிவதனி அவர்கள் நாயன்மார்க்குளப் பகுதி, மற்றும் குளத்திற்கான பிரதான வீதி அருகாமையில் உள்ள வெற்றிக்காணியில் போடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றும் வேலைத்திட்டமாக உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். முதல்வரின் இவ் விசேட நடவடிக்கையினால் பொது வெளியில் கழிவுகளை வீசுபவர்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளதுடன், இத் திட்டம் முதல் நாளிலேயே மாநகர மக்கள் மத்தியில் மிகவும் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக்காலமாகவே மாநகரில் திட்டமிட்ட வகையில் ஒருசிலரால் மாநகர சபையின் நற்பெயருக்கு குந்தகம் விளைவிக்கும் முகமாக தமது வீட்டுக் கழிவுகளை வீதிகளில் வீசும் செயற்பாடுகளும், மாநகர சபைக்கு அண்மைய உள்ளூராட்சி சபைகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதனால் அப் பிரதேச மக்கள் தமது வீட்டுக் கழிவுகளை யாழ் நகருக்குள் வரும் போது மாநகர எல்லைக்குள் வீதிகள், பொது இடங்களில் வீசிச் செல்லும் நடவடிக்கைகளும் மாநகர அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மாநகரசபையினால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள முறைமைகளான பிரட்டு அலுவலகங்கள் மற்றும் மாநகர குப்பை காவும் வாகனங்களில் வீட்டுத் திண்மக்கழிவுகளை வழங்காமல் வீதிகளில் வீட்டுக் கழிவுகளை வீசுபவர்கள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகள் முதல்வர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்வில் மாநகர சுகாதாரக் குழு தலைவர் எஸ்.சாருபன், சுகாதாரக் குழு உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.












# கட்டி இழுத்துச் சென்ற டிராக்டர் மீதே கட்டுப்பாட்டை இழந்து ஏறியது டிப்பர்

## களுவாஞ்சிகுடி பகுதியில் நேற்று சம்பவம்

(ஜதுர்சயன்)

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் நேற்று சனிக்கிழமை டிராக்டர் ஒன்றின் மீது டிப்பர் வாகனம் ஏறி விபத்துக்குள்ளானதில், டிராக்டரின் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குச் சொந்தமான டிப்பர் வாகனம் ஒன்று களுவாஞ்சிகுடி பிரதான வீதியில் பழுதடைந்துள்ளது.

அந்த வாகனம் பழுதுபார்ப்பதற்காக டிராக்டர் ஒன்றின் உதவியுடன் சங்கிலியால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

களுவாஞ்சிகுடி பகுதியில் வீதியில் சென்றுகொண்டிருந்தபோது, பின்னால் இழுத்து வரப்பட்ட டிப்பர் வாகனம் எதிர்பாராத விதமாக வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் முன்னால் இழுத்துச் சென்ற டிராக்டரின் மீது ஏறியுள்ளது.

டிப்பர் வாகனம் தனது இயந்திரத்தின் மீது ஏறுவதைக் கண்ட டிராக்டர் சாரதி, சாமர்த்தியமாக கீழே குதித்துள்ளார்.

இதனால் அவர் எவ்வித காயங்களுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினார். எனினும், இந்த விபத்தினால் டிராக்டர் பலத்த சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸார், விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வாகனங்களை இழுத்துச் செல்லும் போது போதிய பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்து.












# இலங்கை நரம்பியல் நிபுணர்கள் சங்கத்தின் 19ஆவது வருட மாநாடு கொழும்பில் ஆரம்பம்

இலங்கை நரம்பியல் நிபுணர்கள் சங்கத்தின் 19 ஆவது வருடாந்த மூன்று நாள் மாநாடு ஹோட்டல் சினமன் கிராண்டில் நேற்று வெள்ளிக்கிழமை தலைவர் டாக்டர் அஜந்தா கேசவராஜ் தலைமையில் ஆரம்பமானது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரிட்டிஷ் நரம்பியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவரான பேராசிரியர் நீல் ராபேர்ட்சன்,கௌரவ விருந்தினராக நரம்பியல் பேராசிரியரும் உலக பக்கவாத அமைப்பின் தலைவருமான பேராசிரியர் ஜெயராஜ் பாண்டியன், நரம்பியல் நிபுணர் ஆலோசகர் பேராசிரியர். ரஞ்சனி கமகே உட்பட உலக எவில் அங்கீகரிக்கப்பட்ட பல நரம்பியல் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

“உருமாற்ற விளைவுகளுக்கான ஒருங்கிணைந்த நரம்பியல்” என்ற கருப்பொருளைக் கொண்ட இம் மாநாட்டில் உள்ளூர்மற்றும்வெளிநாட்டு பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பேராசிரியர் நீல் ராபேர்ட்சன், பேராசிரியர் ஜெயராஜ் பாண்டியன், பேராசிரியர். ரஞ்சனி கமகே ஆகியோருக்கு. தலைவர் டாக்டர் அஜந்தா கேசவராஜ் ஞாபகார்த்த சின்னம் வழங்கி கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.




















# எள்ளங்குளத்தில் இடம்பெற்ற சாந்தனின் நினைவேந்தல்

இந்தியாவின் முன்னால் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 32 வருடங்கள் இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டு இந்திய உச்ச நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட போதிலும் தமிழக சிறையில் தீவிர நோய் பாதிப்பிற்குள்ளாகி சாவடைந்திருந்த சாந்தனின் 2 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று எள்ளங்குளத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றுள்ளது.

ஈழத்துக்கான சிறை வாழ்க்கையில் அதிக காலம் சிறையிருந்து சிறைக்குள் மரணித்து பள்ளிப்படையாக உள்ள ம.தி. சாந்தனின் 2 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு எள்ளங்குளம், இந்து மயானத்தில் உள்ள அவரது துயிலாலயத்தில் நேற்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றுள்ளது.

சாந்தனின் திருவுருவப் படத்திற்கு அவரது தாயார் மாலை அணிவித்ததை தொடர்ந்து அவரது குடும்பத்தவர்கள் உள்ளிட்ட பலரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தி இருந்தனர். இதன்போது சாந்தனின் குடும்பத்தினர், உறவினர்கள், வல்வை பிரஜைகள் குழு செயலாளர் ந.அனந்தராஜ், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன், முன்னாள் போராளிகள், தமிழ்த் தேசிய ஆர்வலர்கள் என பலரும் பங்கேற்று உணர்வுபூர்வமான முறையில் அஞ்சலி செலுத்தி இருந்தனர்.

பள்ளிப்படை என்பது ஒரு வீரன் மரணிக்கும் போது. அவனது சமாதியில் அல்லதுஅவனதுசாம்பலின்மேல்,அவன் குல தெய்வமாக வழிபட்ட தெய்வத்தை பிரதிட்டை செய்து வணங்குதாகும். பண்டைய தமிழர் மரபில் இருந்து தொடரும் இம்முறையில் சோழர் மற்றும் பாண்டிய மன்னர்களின் பல கோயில்கள் இந்தியாவில் அமைந்துள்ளது.

அந்த வகையில் தமிழர் மரபு வழிந்த “பள்ளிப்படை“ வழிபாட்டில், தாயகத்தில், வழிபாட்டில் உள்ள ஒரே ஒரு பள்ளிப்படையாக எள்ளங்குளத்தில் உள்ள சாந்தன் துயிலாலயம் ஆமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.













# மத்திய கிழக்குக்கான விமான சேவைகள் ரத்து

## 7 நாள்கள் கட்டணமின்றி விசா நீடிப்பு

மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமான சேவைகள் நேற்று முதல் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பயணிகளின் நலன் கருதி குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் விசேட தீர்மானமொன்றை எடுத்துள்ளது.

விமானப் பயணங்கள் இரத்து செய்யப்பட்டதன் காரணமாக, தங்களது விசா காலம் முடிவடைவதற்குள் இலங்கையிலிருந்து வெளியேற முடியாத பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு, குறித்த பயணிகள் சட்டரீதியாக இலங்கையில் தங்கியிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் 7 நாள்களுக்கு இலவச விசா நீடிப்பு வழங்கப்படவுள்ளது.

பயணிகள் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாகக் கருதப்படுவதைத் தவிர்க்கவும், அவர்கள் தங்களது மாற்றுப் பயண ஏற்பாடுகளைச் செய்யும் வரை எவ்வித அசௌகரியமுமின்றி தங்கியிருக்கவும் இந்த அனுமதி வழங்கப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

# இலங்கை - மத்தியகிழக்கு இடையில் இரத்தான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்களின் விவரம்

மத்திய கிழக்கில் நிலவும் சூழல் காரணமாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தினால் நேற்று இயக்கப்படவிருந்த பின்வரும் விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

**கொழும்பிலிருந்து புறப்படவிருந்த விமானங்கள்:**

UL265 - கொழும்பு - ரியாத்
UL 229 - கொழும்பு - குவைட்
UL253 - கொழும்பு - தம்மாம்
UL 225 - கொழும்பு - டுபாய்

**கொழும்பு நோக்கி வரவிருந்த விமானங்கள்:**

UL 230 - குவைத் - கொழும்பு
UL 265 - ரியாத் - கொழும்பு
UL 254 - தம்மாம் - கொழும்பு
UL 226 - டுபாய் - கொழும்பு
UL218 - டோஹா - கொழும்பு




# ஜோர்டானிலுள்ள இலங்கையர்களுக்கு விசேடமான பாதுகாப்பு வழிகாட்டல்கள்

## இலங்கைத் தூதரகம் வெளியிட்டது



மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய பதற்றமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, ஜோர்டானில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கான விசேட பாதுகாப்பு வழிகாட்டல்களை ஜோர்டானிலுள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ளது.

ஜோர்டானில் உள்ள இலங்கையர்கள் தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், மிகவும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஜோர்டான் அரச அதிகாரிகள் மற்றும் தூதரகம் அவ்வப்போது வெளியிடும் பாதுகாப்பு வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் கட்டாயம் கடைப்பிடிக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் அவசர நிலை ஏற்படும் பட்சத்தில், இலங்கையர்கள் கீழ்க்காணும் எண்கள் மற்றும் மின்னஞ்சல் மூலம் தூதரகத்தைத் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக தூதரகப் பொறுப்பாளர்: 00962 781365773

கொன்சுலர் அதிகாரி: 00962 781548585

அவசர இலக்கம் (Hotline): 00962 - 777313323

மின்னஞ்சல்: slemb.amman@mfa.gov.lk

மத்திய கிழக்கில் நிலவும் அசாதாரண சூழலால் தங்களின் பாதுகாப்பு குறித்து அவதானமாக இருக்குமாறு ஜோர்டான் வாழ் இலங்கையர்களைத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.



# ஜனவரியில் வாகன இறக்குமதி சரிவு; வெளிநாட்டு பணவனுப்பல் அதிகரிப்பு

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான இலங்கையின் பொருளாதார நிலவரம் குறித்த அறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

கடந்த 2025 டிசம்பர் மாதத்தில் 301 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்ட வாகன இறக்குமதி, 2026 ஜனவரியில் 224 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளது.

அதேவேளை, சுற்றுலாத்துறையில் சாதகமான வளர்ச்சி பதிவாகியுள்ளது.

2025 ஆம் ஆண்டின் மாதாந்த வருகையை விட, 2026 ஜனவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் 378 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் தொழிலாளர்களால் நாட்டுக்கு அனுப்பப்பட்ட பணப்பரிமாற்றம் ஜனவரியில் 751 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 31.1 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

இந்தநிலையில், அரசாங்க பிணையங்கள் சந்தையில் 17 மில்லியன் அமெரிக்க டொலர் தேறிய முதலீடுகள் உள்வருகையாகப் பதிவாகியுள்ளன.

கொழும்பு பங்குச்சந்தையின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தை கொடுக்கல் வாங்கல்களில் 22 மில்லியன் அமெரிக்க டொலர் தேறிய வெளிச்செல்லலாகப் பதிவாகியுள்ளது.

சீன மக்கள் வங்கியுடனான நாணயப் பரிமாற்று வசதி உட்பட, 2026 ஜனவரி இறுதியில் நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு 6.8 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது.

## ஈரானில் நிலவும் போர்ப் பதற்றம்:

# இலங்கையர்களைப் பாதுகாக்க அரசுக்கு சஜித் அவசர கோரிக்கை



ஈரானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலின் ஈரான் மீதான தாக்குதலை தொடர்ந்து எதிர்கட்சித்தலைவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இந்த பதிவை செய்துள்ளார்.

இந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஈரானில் ஏற்பட்டுள்ள தீவிர இராணுவ நடவடிக்கையின் காரணமாக அங்கிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அவர்களின்பாதுகாப்பைஉறுதிசெய்யஅரசாங்கம் உடனடியாக இராஜதந்திர மற்றும் அவசரகால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியா வளர்ச்சியடைவதற்கு தனியார் பங்களிப்பு அவசியம்

## பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தல்



“இந்தியாவின் வளர்ச்சியில் தனியார் பங்களிப்பு மிகவும் அவசியம். முதலீடு, புதுமை கண்டுபிடிப்பில் தனியார் துறை கவனம் செலுத்தி நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.”

– இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 1 ஆம் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழிக் கருத்தரங்க தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. “வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொழில்நுட்ப சீர்திருத்தங்கள் மற்றும் நிதி” என்ற தலைப்பில் நடைபெற்ற முதலாவது கருத்தரங்கில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2047 ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் நாட்டின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

குறிப்பாக நாட்டின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் மத்திய பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன. இதன்படி நெடுஞ்சாலை, ரயில்வே, துறைமுகங்களின் கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்பட உள்ளன. மேலும் பட்ஜெட்டில் டிஜிட்டல் கட்டமைப்பு, எரிசக்தி திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது.

தொழில் தொடங்க ஏதுவாக சூழல் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்தியாவின் வளர்ச்சியில் தனியார் பங்களிப்பு மிகவும் அவசியம். முதலீடு, புதுமை கண்டுபிடிப்பில் தனியார் துறை கவனம் செலுத்தி நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். உலக நாடுகளுடன் தனியார் நிறுவனங்கள் போட்டியிட வேண்டும்.

பட்ஜெட்டுக்கு பிந்தைய இணைய வழி கருத்தரங்குகள் மிகவும் முக்கியமானவை. இந்த அமர்வுகள் வெறுமனே கருத்துப் பரிமாற்றம் என்ற அளவோடு நின்று விடாமல், பயனுள்ள சிந்தனையைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். பட்ஜெட்டை அமுல்படுத்தும்போது ஏற்படும் நடைமுறை சவால்கள் குறித்து கருத்தரங்கில் கருத்துகளை பரிமாறிக் கொள்ள வேண்டும். இதன்மூலம் பொருளாதார கொள்கைகள், திட்டங்களை மேம்படுத்த முடியும். பல்வேறு பிரச்சினைகளுக்கு எளிதாக தீர்வு காண முடியும்.” என தெரிவித்துள்ளார்.

# விஜய்யின் தனிப்பட்ட விஷயங்களை அரசியலில் பேச வேண்டியதில்லை

## கார்த்தி சிதம்பரம் எம்.பி தெரிவிப்பு



“மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கூட்டணி உள்ள கட்சிதான் ஆட்சியில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. விஜய்யின் தனிப்பட்ட விஷயங்களை அரசியலில் பேச வேண்டிய அவசியமில்லை.”

–இவ்வாறு சிவகங்கை எம்.பி கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

சிவகங்கை அருகே கீழப்பூங்குடியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் கார்த்தி சிதம்பரம் எம்.பி கூறுகையில்,

“பிரதமர் குடியிருப்புத் திட்டத்தில் அரசு ஒதுக்கும் நிதி போதவில்லை. இதனால் பலர் கூடுதலாக கடன் வாங்கி தான் கட்டுகின்றனர். கடன் கிடைக்காதோர் வீடுகளை கட்ட முடியாமல் நிறுத்தி வைத்துள்ளனர். இதனால் அத்திட்டத்தில் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப நிதியை மத்திய அரசு உயர்த்த வேண்டும்.

த.வெ.க தலைவர் விஜய்யின் தனிப்பட்ட விஷயங்களை அரசியலில் பேச வேண்டிய அவசியமில்லை.

புதிய கட்சிகள் வந்துகொண்டே இருப்பதால் இண்டியா கூட்டணியின் பலம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கூட்டணி உள்ள கட்சி தான் ஆட்சியில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தமிழகத்துக்குமதச்சார்பற்றஅரசுதான்தேவை.” என்று கூறினார்.

# விவசாயிகளை அளிக்கக்கூடியது அமெரிக்கவின் வர்த்தக ஒப்பந்தம்

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம், இந்திய விவசாயிகளை அழிக்க வல்லது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டினார்.

பஞ்சாப் மாநிலம் பர்னாலாவில் நடைபெற்ற மஸ்தூர் கிசான் மகா பேரணியில் பேசிய ராகுல் காந்தி,

“இந்தியா – அமெரிக்க ஒப்பந்தம், விவசாயத் துறை குறித்து ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நான்கு மாதங்களாக முடங்கி கிடந்தது. நான்கு மாதங்களாக செய்யாத வேலையை, பிரதமர் ஏன் 15 நிமிடங்களில் செய்தார்?

அந்த வர்த்தக ஒப்பந்தம் ஏன் திடீரென கையெழுத்தானது? இந்திய பிரதமர் அங்கு நம் நாட்டுக்கான மரண “வாரன்ட்டில்“ கையெழுத்திட்டதற்கு எத்தகைய அழுத்தம் காரணம்?

பிரதமர் மோடி தனது விவசாயிகளுக்கான மரண வாரன்ட்டில் கையெழுத்திட்டார். அவர் எங்கள் தரவுகளை வழங்கினார். அவர் எங்கள் சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான மரண “வாரன்ட்டில்” கையெழுத்திட்டார்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் 9 லட்சம் கோடி இந்திய ரூபாய மதிப்பிலான அமெரிக்க பொருட்களை இந்தியா வாங்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு பிரதமர் மோடி உத்தரவாதம் அளித்துள்ளார். இந்த ஒப்பந்தம், இந்திய விவசாயிகளை அழிக்கவல்லது.

வேளாண் துறைக்கான சந்தையை திறந்துவிடுவதன் மூலம் அமெரிக்கப் பொருள்கள் இந்தியச் சந்தைக்குள் நுழைவதோடு, இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், ஹரியாணா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஒடிசா ஆகிய மாநிலங்களில் விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

நரேந்திர மோடி விவசாயத் துறையின் கதவைத் திறந்துவிட்டார். அமெரிக்கப் பொருள்கள் பாய்ந்து நம் விவசாயிகள் நாசமாகிவிடுவார்கள்.” – என்றார்.



# ஈரான் பாதுகாப்பு அமைச்சரும் காவற்படை தளபதியும் மரணம்

இஸ்ரேல், ஈரான் மீது நடத்திய தாக்குதலில் ஈரானின் பாதுகாப்பு அமைச்சர் அமீர் நசீர்சாதே மற்றும் புரட்சிகர காவற்படையின் தளபதி முகமது பக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பத்தகுந்த தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து நன்கு அறிந்த இருவர் மற்றும் பிராந்திய பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்த ஒருவர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரானின் இராணுவப் படிநிலையில் மிக உயர்ந்த பதவிகளில் இருக்கும் இருவர் ஒரே நேரத்தில் இலக்கு வைக்கப்பட்டுள்ளமை மத்திய கிழக்கில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரானில் உள்ள இராணுவ இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில், இந்த மரணங்கள் குறித்த செய்திகள் வெளியாகியுள்ளன.

# ஈரானில் ஆட்சியைக் கவிழ்க்க இதுவே பொன்னான வாய்ப்பு

## ஈரான் மக்களுக்கு இஸ்ரேல் பிரதமர் அழைப்பு



ஈரான் மக்கள் தங்களைக் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெஞ்சமின் நெதன்யாகு ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள், ஈரான் மக்கள் சுதந்திரம் பெறுவதற்கு உதவும் என அவர் தெரிவித்தார்.

மேலும் தற்போதைய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இது ஒரு தலைமுறையில் ஒருமுறை மட்டுமே கிடைக்கக்கூடிய அரிய வாய்ப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈரான் மக்கள் அனைவரும் பெருமளவில் வீதிகளில் இறங்கிப் போராட வேண்டும் எனவும், இந்த வரலாற்றுப் பணியினை ஒன்றிணைந்து செய்து முடிக்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஈரானின் இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இணைந்து தீவிரத் தாக்குதல்களை முன்னெடுத்து வரும் நிலையில், நெதன்யாகுவின் இந்த உரை சர்வதேச அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



# தாக்குதலுக்கான விலையை கொடுக்க வேண்டியிருக்கும்

## அமெரிக்கா - இஸ்ரேலுக்கு ஈரான் எச்சரிக்கை

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடுத்துள்ள பாரிய தாக்குதல்களுக்காக, அதற்கான விலையை அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கும் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானின் தேசிய பாதுகாப்புச் சபை செயலாளர் அலி லாரிஜானி இந்தக் கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஈரானின் வீரமிக்க இராணுவமும் மக்களும் இணைந்து சர்வதேச அளவில் அடக்குமுறைகளைக் கையாளும் இந்த நரகவாசிகளுக்கு மறக்க முடியாத ஒரு பாடத்தைப் புகட்டுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானிய அரசு ஊடகம் இந்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளதுடன், ஈரான் தனது தற்காப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

# இரண்டு மூன்று நாள்களில் இந்த போரை முடிக்க முடியும்

## ட்ரம்ப் அதிரடித் தகவல்



ஈரான் மீதான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, பதற்றத்தைத் தணிப்பதற்கான பல்வேறு வெளியேறும் வழிகள் தன்னிடம் இருக்கின்றன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான தாக்குதல் குறித்த அறிவிப்பை வெளியிட்ட பிறகு, முதன்முறையாக இந்த நடவடிக்கை குறித்து அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

"அக்சியோஸ்"செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய தொலைபேசி நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈரான் விவகாரத்தில் தான் கையாளக் கூடிய இருவேறுபட்ட அணுகுமுறைகளை ட்ரம்ப் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து அவர் கூறுகையில், "நாங்கள் இந்த நடவடிக்கையை இரண்டு மூன்று நாள்களில் முடித்துவிட்டு ஈரானியர்களிடம் இவ்வாறு கூறலாம் "உங்கள் அணுசக்தி திட்டத்தை நீங்கள் மீண்டும் கட்டமைக்கத் தொடங்கினால், இன்னும் சில ஆண்டுகளில் உங்களை மீண்டும் சந்திப்போம்." எனத் தெரிவித்தார்.

இந்த வாரம் நடைபெற்ற அணுசக்தி பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத காரணத்தினாலேயே, ஈரான் மீதான தாக்குதலுக்கு தான் பச்சைக்கொடி காட்டியதாக ட்ரம்ப் விளக்கமளித்துள்ளார்.

ஈரானின் அணுகுமுறை குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில். "ஈரானியர்கள் ஒப்பந்தத்திற்கு மிக நெருக்கமாக வருவதும், பின்னர் பின்வாங்குவதுமாக இருந்தனர். இதிலிருந்து அவர்கள் உண்மையாகவே ஒரு ஒப்பந்தத்தை விரும்பவில்லை என்பதை நான் புரிந்துகொண்டேன்." என குறிப்பிட்டுள்ளார்.



# அமெரிக்காவின் 05 தளங்களை தாக்கின ஈரானிய ஏவுகணைகள்

தெஹ்ரான் மற்றும் பல நகரங்களை குறிவைத்து அமெரிக்க – இஸ்ரேலிய தாக்குதல்களுக்கு ஈரான் தொடர்ந்து பதிலடி கொடுத்தது.

அதற்கு அமைவாக மத்திய கிழக்கில் உள்ள குறைந்தது 05 அமெரிக்க இராணுவ தளங்கள் ஈரானிய ஏவுகணைகளால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளன என தெஹ்ரான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானிய செய்திச் சேவையின் கூற்றுப் படி, இலக்கு வைக்கப்பட்ட தளங்களில் கட்டாரில் உள்ள அல்-உதெய்த் விமானப் படை தளம், குவைத்தில் உள்ள அல்-சல்மியா விமானப்படை தளம், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அல்-சாஃப்ரா விமானப்படை தளம், பஹ்ரைனில் உள்ள 5 ஆவது அமெரிக்க தளம் மற்றும் ஜோர்டானில் உள்ள கிங் ஹுசைன் விமானப்படை தளம் ஆகியவை அடங்குகின்றன.

ஈரானிய ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து குவைத், பஹ்ரைன் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வான்வழித் தாக்குதல் சைரன்கள் தொடர்ந்து ஒலித்து வருவதாக அரபு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டெல் அவிவ், ஆக்கிரமிக்கப்பட்ட அல்-குட்ஸ் மற்றும் பீர் ஷேவா உள்ளிட்ட ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலும் வெடிப்புகள் பதிவாகியுள்ளன என தெஹ்ரான் டைம்ஸ் மேலும் கூறியுள்ளது.









# அமெரிக்க - இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது அதிதீவிர தாக்குதல்

## தெற்கு ஈரான் மாணவிகள் உள்பட 40 பேர் உயிரிழப்பு

ஈரான் தலைநகர் தெஹ்ரான் உள்ளிட்ட அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து தீவிர தாக்குதலில் ஈடுபட்டுள்ளன.

ஈரானின் கண்டம் விட்டு கண்டம் பாயும் அணுசக்தி ஏவுகணைகள் தயாரிக்கும் திட்டத்தை தடுப்பது தொடர்பாக அமெரிக்காவும், ஈரானும் மேற்கொண்ட அமைதிப் பேச்சுவார்த்தையில் எவ்வித உடன்பாடும் எட்டப்படாத நிலையில், இஸ்ரேலும் அமெரிக்காவும் இந்த கூட்டுத் தாக்குதலில் இறங்கியுள்ளன.

ஏற்கெனவே ஈரான் மீது இந்த இரு நாடுகளும் 12 நாள்கள் தாக்குதல் நடத்தின. அது முடிந்து 8 மாதங்கள் ஆன நிலையில், மீண்டுமொரு தாக்குதல் தொடங்கியுள்ளது. இந்த முறை இன்னும் ஆக்ரோஷமாக தாக்குதல் இடம்பெறுகின்றது.

ஆனால், ஈரானும் சற்றும் சளைக்காமல் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. வடக்கு இஸ்ரேலை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. இரு தரப்பிலும் தாக்குதலால் ஏற்பட்ட முழுமையான சேத விவரங்கள் இன்னும் முழுமையாக வெளியாகவில்லை. இருப்பினும், அண்மைத் தகவலின்படி தெற்கு ஈரானில் பெண்கள் பாடசாலையில் ஏவுகணை விழுந்ததில் மாணவிகள் உள்பட 40 பேர் உயிரிழந்தனர் என ஈரான் தேசிய ஊடகக் குறிப்பு தெரிவிக்கின்றது.

இலங்கை நேரப்படி இன்று காலை 6.27 மணிக்கு ஈரானின் ஃபர்ஸ் செய்தி நிறுவனம் ஒரு செய்தி வெளியிட்டது. அதில், தலைநகர் தெஹ்ரானில் பல இடங்களில் தொடர் தாக்குதல்கள் நடந்ததாகத் தெரிவித்தது. அடுத்தடுத்த மணி நேரங்களில் ஈரானில் ஆங்காங்கே தாக்குதல்களால்விண்ணைமுட்டும்அளவுக்கு கிளம்பும் புகை கொண்ட காணொலிகள் சமூக வலைதளங்களில் வெளியாகின.

அந்த வேளையில் இஸ்ரேல் முதன்முறையாக அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிட்டது. 'ஈரான் மீது தாக்குதல் நடத்தப்பட்டது' என்று இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இதற்கிடையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது சமூக வலைதளப் பக்கத்தில், ஈரான் மீதான தாக்குதலை உறுதி செய்து ஒரு வீடியோப் பதிவை வெளியிட்டார்.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, ஈரானின் புரட்சிகர இஸ்லாமிக் படைகளின் தலைமையகம் அருகே பயங்கர தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தவிர ஈரானின் ஜமோரி பகுதியிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மிக முக்கியமான ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் அலுவலகம் அருகேயும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஈரானின் வட பகுதியான செய்யது கண்டன் பகுதி, கெர்மான்ஷா, கோம், தப்ரீஸ், இஸ்ஃபஹான், இலாம் மற்றும் கரஜ் ஆகிய பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட உடனேயே ஈரான் உடனடியாக இஸ்ரேல் மீது ஏவுகணைகள் ஏவியது. வடக்கு இஸ்ரேலின் பல்வேறு பகுதிகளிலும் வான்வழித் தாக்குதலுக்கான எச்சரிக்கை ஒலிகள் எழுப்பப்பட்டது.

பஹ்ரைனில் உள்ள அமெரிக்காவின் கடற்படை தலைமையகம், ரியாத், சவூதி அரேபியாவில் ஈரான் பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.

முன்னதாக, ஈரான் நாடாளுமன்ற தேசிய பாதுகாப்பு கமிஷனின் தலைவர் இப்ரஹிம் அசிசி, "நாங்கள் உங்களை ஏற்கெனவே எச்சரித்தோம். இப்போது நீங்கள் தேர்வு செய்துள்ள பாதையின் முடிவு உங்கள் கைகளில் இல்லை" என்று கடுமையான கண்டனங்களை தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். அவரது இந்த காத்திரமான பதிவு கவனிக்கத்தக்கது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாகக் குறிவைக்கும் 86 வயதான ஈரானின் உச்ச தலைவர் கமேனி எங்கிருக்கிறார் என்பது பற்றிய தகவல்கள் ஏதுமில்லை. தெஹ்ரானில் அவரது இல்லத்துக்குச் செல்லும் சாலைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன.

அதேபோல் ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியான் காயமடைந்துள்ளார் என தகவல்கள் வெளியான நிலையில், அவர் நலமுடன் இருக்கிறார் என ஐ.ஆர்.என்.ஏ. செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.



# உடன் சரணடையுங்கள் அல்லது மரணத்தை எதிர்கொள்ளுங்கள்

## ஈரானுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை



ஈரான் மீதான தாக்குதலை உறுதிப்படுத்திய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், “சரணடையுங்கள் அல்லது மரணத்தை எதிர்கொள்ளுங்கள்” என்று அந்நாட்டுக்கு பகிரங்க எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளப் பக்கத்தில் ட்ரம்ப் பகிர்ந்த பதிவில்,

“ஈரானின் புரட்சிகர இஸ்லாமியப் படையினருக்கும், ஆயுதப் படைகளுக்கும், காவல் துறைக்கும், நான் இன்றிரவு ஓர் எச்சரிக்கையை விடுக்கிறேன். உங்கள் ஆயுதங்களைத் துறந்து சரணடையுங்கள். உங்கள் மீதான நடவடிக்கைகள் நிறுத்தப்படும். இல்லாவிட்டால், உறுதியாக மரணத்தை எதிர்கொள்வீர்கள்.” என்று குறிப்பிட்டார்.

மேலும், இந்தத் தாக்குதல், ஈரான் தனது அணுசக்தி மையங்களில் மீள் கட்டமைப்பு செய்வதை தடுக்கும் வகையில் நிகழ்த்தப்பட்டதாகவும் ட்ரம்ப் விளக்கமளித்துள்ளார்.

முன்னதாக, இஸ்ரேலும் அமெரிக்காவும் கூட்டாக ஈரான் மீது தீவிரத் தாக்குதலை தொடங்கியுள்ளன. இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா ‘ஒபரேஷன் எபிக் ஃப்யூரி’ என்று பெயரிடப்பட்டுள்ளது. பதிலடிக்கு ‘ஒபரேஷன் ரோர் ஆஃப் தி லயன்’ என்று ஈரான் பெயர் வைத்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் – அமெரிக்க இராணுவ கூட்டுத் தாக்குதல் ஈரானின் அரசு கட்டடங்கள், இராணுவ நிலைகளைக் குறிவைத்து நடத்தப்பட்டுள்ளது. ஈரான் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் அதிகாரபூர்வ அலுவலகத்தையும் குறிவைத்து நடத்தப்பட்டுள்ளது.

ஈரானுடனான பேச்சுவார்த்தையில் அதிருப்தியை ட்ரம்ப் வெளிப்படுத்திய சில நாள்களிலேயே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரான் அணுகுண்டை தயாரிக்க மாட்டேன் என உறுதியளிக்க வேண்டும் என்பதுதான அமெரிக்காவின் நிபந்தனையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், இந்தத் தாக்குதலை ட்ரம்ப் புகழ்ந்துள்ளார்.

“அமெரிக்கர்களுக்கான அச்சுறுத்தல்களை துடைத்தெறியும் தாக்குதல் இது. ஈரான் மீள் கட்டமைக்கும் அணு ஆயுதங்களை அழிப்பதே எங்களின் திட்டம். ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்க அமெரிக்க ஒருபோதும் அனுமதிக்காது.” என்று கூறியுள்ளார்.

ஈரான் இராணுவம், பொலிஸுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள ட்ரம்ப், ஈரான் மக்களுக்கான ஒரு செய்தியையும் கூறியுள்ளார்.

அதில் ட்ரம்ப், “சக்திவாய்ந்த ஈரானிய மக்களே, இன்றிரவு உங்களுக்கு நீங்கள் விரும்பிய சுதந்திரம் கைகளில் கிட்டும். அதுவரை பாதுகாப்பாக இருங்கள். வீடுகளை விட்டு வெளியே செல்லாதீர்கள். வெளியே ஆபத்துள்ளது. குண்டுகள் எங்கு வேண்டுமானாலும் விழக்கூடும். எல்லாம் முடியட்டும். உங்களுக்கான அரசை நீங்களே உருவாக்குங்கள். அது உங்களிடமே விடப்படும்.” என்று ட்ரம்ப் கூறியுள்ளார்.

# ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்கு கண்டனம்

## பேச்சுவார்த்தைக்கு அழைப்பு



அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து, அண்டை நாடுகள் மீது ஈரான் முன்னெடுத்துள்ள ஏவுகணைத் தாக்குதல்களுக்கு பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது குறித்து பிரித்தானியப் பிரதமர் கீர் ஸ்டார்மர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் மற்றும் ஜேர்மனிய தலைவர் பிரீட்ரிக் மெர்ஸ் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இந்த கண்டனத்தை பதிவு செய்துள்ளனர்.

இந்த அறிக்கையில் ஈரான் தனது அணு ஆயுதத் திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் எனவும், பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

ஈரான் மீதான நேற்றைய தாக்குதல்களில் தாம் பங்கெடுக்கவில்லை என்பதை குறித்த மூன்று நாடுகளினதும் தலைவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இருப்பினும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உள்ளிட்ட சர்வதேச பங்காளிகளுடன் தாம் நெருங்கிய தொடர்பில் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அண்டை நாடுகள் மீதான ஈரானின் கண்மூடித்தனமான தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்துள்ள அவர்கள், இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முன்வருமாறும், ஈரான் மக்கள் தங்களது எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள்-01.03.2026




இன்று கடினமான நாளாக இருக்கும். உங்கள் பொறுமை இழப்பீர்கள். பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்காது. உங்களின் சௌகரியங்களை இழக்க நேரும். குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் வீட்டின் புனரமைப்பிற்கான வகையில் கட்டாய பணச் செலவு செய்ய நேரும். உங்கள் செலவுகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலக் குறைபாடு ஒன்றிற்காக பணத்தை செலவு செய்ய நேரலாம்.




இன்று உற்சாகமான நாள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக உங்கள் இயல் திறனை நிரூபித்துக் காட்டுவீர்கள். அர்ப்பணிப்புடன் பணி செய்து வெற்றி காண்பீர்கள்.

உங்களது கலகலப்பான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பண வரவு அதிகரித்து காணப்படும். தொலை தூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக உங்கள் மன நிலையும் உடல் நிலையும் ஆரோக்கியமாக இருக்கும்.




இன்று சற்று மந்தமான உணர்வுகள் காணப்படும். அதனை தவிர்த்தல் நலம். இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். கையாள கற்றுக் கொள்ளுங்கள்.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழக வேண்டும். இதனால் ஆரோக்கியமான உறவு பராமரிக்கப்பட்டு நல்லுறவு மேம்படும்.

அதிக செலவினங்கள் காணப்படுகின்றது. பணம் இழக்காமலிருக்க சாதுர்யமாக திட்டமிட்டு செலவு செய்யுங்கள்.

உங்களுக்கு கண் எரிச்சல், முதுகுவலி மற்றும் கால் வலி ஏற்படலாம். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் ஜபிப்பதன் மூலம் இவற்றை தவிர்க்கலாம்.




இன்று அதிக பொறுப்பும் பதட்டமும் காணப்படும். விவேகமான, முறையான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணி நிமித்தமாக பயணம் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிச்சுமை காரணமாக பதற்ற உணர்வு ஏற்படலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் வீட்டின் சீரமைப்பிற்காகவும் புனர் நிர்மானத்துக்காகவும் பணம் செலவு எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சினைகளை கையாள கடின முயற்சி தேவை.

பணி வளர்ச்சியைப் பொருத்த வரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று அனைத்து விதத்திலும் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மற்றும் உறுதி காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் சுறுசுறுப்பாக பணியாற்றுவீர்கள். குறைந்த நேரத்தில் விரைந்து பணிகளை ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு ஆரோக்கியமாக இருக்கும்.

இன்று பண வரவு காணப்படும். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

இன்று கடினமான வேலைகளையும் எளிதாக ஆற்ற முடியும். பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதன் காரணமாக உங்கள் துணை உங்களை நன்கு புரிந்துகொள்வார்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் லாபகரமானதாக இருக்கும் என்பதால் அதில் பங்கு




நீங்கள் செய்த தவறுகளை இன்று சரி செய்ய வேண்டும். உங்கள் செயல்களை முறையாக ஏற்பாடு செய்து ஒரு கட்டுப்பாட்டோடு செய்யுங்கள்.

உங்கள் பணிகளை பொறுமையுடனும் உறுதியுடனும் ஆற்ற வேண்டும்.பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் பிரிய மானவரின் வார்த்தைகள் உங்களை காயப்படுத்து வதாக உணர்ந்து சோர்வு கொள்வீர்கள். சகஜமாக அணுகுவது மகிழ்ச்சியான உறவிற்கு நல்லது

இன்று செலவுகள் அதிகரிக்கக் காண்பீர்கள். அதற்கு தகுந்தாற்போல பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும். தேவையற்ற கவலைகள் மற்றும் தோல் எரிச்சல் காரணமாக நீங்கள் தூக்கத்தை இழப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 01.03.2026




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டும். திட்ட மிடுதலும் முயற்சியும் இன்று மிகவும் தேவை.

அமைதியாக இறைவழிபாட்டில் ஈடுபட்டு உங்கள் பணிகளை ஆற் றுங்கள். அதனால் வெற்றியும் நல்ல பெயரும் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படாதீர்கள். நட்பாக அணுகி கலகலப்பாக பழகுங்கள்.

அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம். இன்று சிறந்த முறையில் பணத்தை கையாள இயலாது.காய்ச்சல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம்.




உங்களிடம் போதிய தைரியம் காணப்படும். உங்கள் முயற்சிகள் நல்ல பலன்களை அளிக்கும். பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் பணியும் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் ஆற்றல் உங்க ளுக்கு தெரிய வரும் நாள் இது. உங்களிடம் இன்று தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்யோன்யமாய் இருப்பீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடியாக காணப்படுவீர்கள்.

பணப்புழக்கம் இன்று திருப்திகரமானதாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை போன்ற கூடுதல் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




இன்றைய நாளை உங்களின் சுய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

இன்று பணிகள் விருப்பமானதாக இருக்கும். என்றாலும் வெற்றி பெறு வதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்களிடம் காணப்படும் புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க அது உதவும்.

உங்கள் பிரியமானவரின் வார்த்தைகள் உங்களை காயப்படுத்துவதாக உணர்ந்து சோர்வு கொள்வீர்கள். சகஜமாக அணுகுவது மகிழ்ச்சியான உறவிற்கு நல்லது

நீங்கள் இன்று ஆரோக்கியமாக நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.



நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்வீர்கள். என்றாலும் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். தொழில் சார்ந்த அணுகுமுறையால் பணிகளை சரிவர ஆற்ற இயலும்.

உங்கள் துணையிடம் உங்கள் கருத்துகளை வலியுறுத்துவீர்கள். நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் நலம்.

பண வரவும் செலவும் காணப்படுகின்றது. எதிர் காலத்துக்காக பணத்தை சேமிக்க வேண்டும்.

உங்கள் சொந்த வளர்ச்சி குறித்த மனக் குழப்பம் காரணமாக பதற்ற உணர்வுடன் காணப்படுவீர்கள்.



# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக 29 ஆயிரம் கையொப்பங்கள்!

## நேற்று நீதியமைச்சுக்கு அனுப்பி வைப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க கோரியும், அரசைப் பாதுகாக்கும் புதிய பயங்கரவாத தடைச்சட்ட முன்மொழிவைக் கைவிடக்கோரியும் அரசை வலியுறுத்தி, வடக்கு – கிழக்கு தமிழ் சிவில் சமூக அமைப்புக்களால் திரட்டப்பட்ட 29,069 கையெழுத்துக்கள் நேற்றையதினம் பதிவுத் தபாலூடாக அனுப்பி அரசாங் கத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் வடக்க. – கிழக்கு முழுவதும் சிவில் சமூக அமைப்புக்களால் நடாத்தப்பட்ட கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது.

அதனையடுத்து திரட்டப்பட்ட அனைத்துக் கையெழுத்துக்களும் நேற் றைய தினம் நீதியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதிசெய்யப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப் பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் மற்றும் இந்தியா, அமெரிக்கா, சுவிஸ், சீனா உள்ளிட்ட தூதரகங்களிடம் நேரில் கையளிக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மிகக் குறுகிய காலப்பகுதியில் குறிப் பிட்ட சில சிவில் அமைப்புகள் இணைந்து அரசு கொண்டுவர எத்தனிக்கும் மோச மான பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெருமளவிலான கையெழுத்துகள் திரட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.